(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM

Case No: CC 189 /2020

Deposition of Witness for Prosecuting / Defence / Court PW1 (LW1)

Name / Father's Name: வசந்தி

Village, Taluk:

Caste, Religion:

Calling, Age:

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of : 10.03.2022

**முதல் விசாரணை**

நான் தற்போது இராயப்பன்பட்டியில் குடியிருந்து, தையல் கடை வைத்துள்ளேன். 04.07.2018ம் தேதி இரவு 7.30 மணியளவில் எனது பக்கத்துவீட்டுக்காரர் சூசை என்பவர் நான் தனியாக இருந்தபோது, ஏற்கனவே எங்களுக்குள் இருந்த இடப் பிரச்சனையை மனதில் வைத்துகொண்டு எங்கள் வீட்டின் கதவின் மீது கல்லை விட்டு எறிந்தும், ஆபாசமான வார்த்தைகயால் திட்டவும் செய்தார். எனது கணவர் அங்கே வந்த போது, அவரிடமும் சண்டைபோட்டு அவரை கீழே தள்ளிவிட்டார் எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது கணவரை துாக்க நான் சென்றபோது, எனது தலை முடியையும் பிடித்து தெருவில் சூசை இழுத்து சென்று கரண்டு போஸ்ட்டில் இடித்தார். நான் வலியில் கத்தியபோது அருகில் இருந்தவர்கள் அங்கே வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். நடந்த சம்பவம் பற்றி இராயப்பன்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டபடும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ 1** ஆகும். புகார் மனுவில் எனது கணவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார். அடிப்பட்ட எங்களுக்கு மேமோ கொடுத்து போலிசார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

மருத்துவமனைக்கு சென்ற போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 8.30 மணிக்கு மேல் இருக்கும். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல்

நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 கிலோ மீ மேல் இருக்கும். புகாரினை ஆய்வாளரிடம் தான் கொடுத்தேன். புகார் கொடுத்த பின்னர் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் புகார் கொடுத்த மறுநாள் ஆய்வாளார் வாங்கினார். போலிசார் என்னை மருத்துவமனையில வைத்து தான் விசாரித்தார்கள். நான் கொடுத்த புகாரில் கதவின் மீது கல் எறிந்ததாகவும், எனது தலையை பிடித்து இழுத்து போஸ்ட்டில் இடித்ததாகவும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு உள்ளேன். சம்பவம் மொத்தமாக எவ்வளவு நேரம் நடைபெற்றது என்றால் சுமார் 45 நிமிடம் நடைபெற்றது. நான் கத்திய பிறகு எத்தனை பேர் அங்கு கூடினார்கள் என்றால் சுமார் 30 நபர்கள் வந்தார்கள். சண்டையில் எனக்கும் எனது கணவருக்கும் இரத்த காயங்கள் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. எங்களது துணிகளிலும் இரத்த கரை ஏற்பட்டது. சம்பவம் முடிந்து அரை மணி நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். இரத்தம்பட்ட துணி மணிகளை போலிசார் எடுத்து சென்றார்களா என்றால் இல்லை. சாட்சி வளனரசு எனக்கு உறவினரா என்றால் தம்பி முறை. சாட்சி சுரேந்திரன் எனது பக்கத்துவீட்டுக்காரர். எனது சமுகத்தை சேர்ந்தவர் தான். மருத்துவமனையில் உங்களுக்கும் உங்களது கணவருக்கும் எப்படி காயம் பட்டது என்று சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி அடித்து தள்ளிவிட்டதில் கல்லில் அடிப்பட்டு எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. மேலும் கட்டையாலும் எதிரி அடித்தார். எனக்கு ஊமைக்காயம் தான் ஏற்பட்டது. எனக்கும் எதிரிக்கும் இடையே பொது நடைபாதை சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். மேற்படி பொது பாதையை எங்களுக்கு சொந்தமாக்க வேண்டி எதிரியின் மீது பொய்யாக புகாரினை கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. மேற்படி பொது பாதையில் தற்போது நீங்கள் சுவரினை கட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. தகரம் தான் அடித்துள்ளோம். நான் புகார் கொடுத்தபோது, எதிரியும் எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

S ARUNKUMAR
Digitally signed by S ARUNKUMAR
Date: 2022.03.10 18:11:05 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM

Case No: CC 189 /2020

Deposition of Witness for Prosecuting / Defence / Court PW2 (LW2)

Name / Father's Name: அந்தோனிசாமி

Village, Taluk:

Caste, Religion:

Calling, Age:

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of : 10.03.2022

**முதல் விசாரணை**

நான் தற்போது இராயப்பன்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பாக 7ம் மாதம் 4ம் தேதி இரவு 7.30 மணியளவில் நான் எனது வேலையை முடித்துவிட்டு எனது வீட்டிற்கு வந்தபோது, எனது பக்கத்துவீட்டுக்காரர் சூசை என்பவர் எனது மனைவி தனியாக இருந்தபோது, ஏற்கனவே எங்களுக்குள் இருந்த இடப் பிரச்சனையை மனதில் வைத்துகொண்டு எங்கள் வீட்டின் கதவின் மீது கல்லை விட்டு எறிந்தும், தண்ணீர் பைப்புகளை உடைத்தும், பிரச்சனை செய்து கொண்டிருந்தார். நான் அவரிடம் கேட்டபோது, என்னையும் அடித்து கீழ தள்ளிவிட்டார். அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. என்னால் எழ முடியவில்லை. என்னை தூக்க எனது மனைவி வந்தபோது அவரது தலை முடியையும் பிடித்து தெருவில் சூசை இழுத்து சென்று கரண்டு போஸ்ட்டில் இடித்தார். நாங்கள் வலியில் கத்தியபோது அருகில் இருந்தவர்கள் அங்கே வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். நடந்த சம்பவம் பற்றி இராயப்பன்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். புகார் மனுவில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். அது **அ.சா.ஆ 2** ஆகும். அடிப்பட்ட எங்களுக்கு மேமோ கொடுத்து போலிசார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகாரினை நானும் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எனது மனைவி சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான்.

நான் புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. மருத்துவமனையில் வைத்து தான் என்னிடம் புகார் வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் தற்போது முதல் விசாரணையில் சொல்லியுள்ள தகவலைத்தான் போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் இடையே பொது நடைபாதை சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். மேற்படி பொது பாதையை எங்களுக்கு சொந்தமாக்க வேண்டி எதிரியின் மீது பொய்யாக புகாரினை கொடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

S ARUNKUMAR

Digitally signed by S ARUNKUMAR
Date: 2022.03.10 18:11:11 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.